# அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் வரலாற்று பாதையில்



பல தசாப்தங்களிற்கு முன்னர் எமது மூதாதைகளால் அரியாலை கொட்டையடி என்னும் பகுதியில் ஒரு நாவல் மரத்தின் கீழ் வைரவர் சூலம் ஒன்றை வைத்து வழிபாடு செய்து வந்தனர். இவ்வாறு சூலத்தைத் ஸ்தாபித்தவர் யார் என்பது எம் முன்னாள் பரம்பரையினருக்கும் தெரியாத இருந்துள்ளது.

வைரவப்பெருமானின் அருளாட்சியினால் இப்பகுதி மக்கள் யாவரும் சீரும் சிறப்பாக வாழ்ந்து வந்தனர். பெருமானின் மீது கொண்ட பக்தியால் பெருமானிற்கு பொங்கல், சிறப்புத் தினங்களில் விசேட தீபங்கள் ஏற்றுதல் போன்ற மரபு முறை வழிபாடுகளை செய்து வந்தனர். பெருமானின் அருட்கடாட்சத்தை பெற்று சிறப்பாக வாழந்து வந்த இம்மக்கள் பெருமானிற்கு ஆக முறைப்படியான ஓர் ஆலயத்தை அமைத்து வழிபட விரும்பினர். பெருமான் சூலவடிவில் கோயில் கொண்டிருந்த வளவின் உரிமையாளரிடம் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தினர். அடியார்களின் விருப்பத்தை புரிந்து கொண்ட வளவின் உரிமையாளரான திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம் அவர்கள் தனது காணியில் ஆலயத்தை அமைக்க தனது விருப்பத்தை தெரியப்படுத்தி தானே முன்னின்று ஆலயத்தைக் கட்டுவித்தார்.

மக்கள் கனவான் சுப்பிரமணியத்தின் உதவியுடன் வைரவப்பெருமான் கோயில் கொண்டிருந்த நாவல் மரத்திற்கருகே சிறிய கோயில் ஒன்றை 1917ம் ஆண்டு அமைத்தனர். கோயிலை ஒழுங்கு முறைப்படி செயற்படுத்தும் பொறுப்பையும் திரு.சுப்பிமணியத்திடமே மக்கள் ஒப்படைத்தனர். அவர் ஆலயத்திற்கென ஒரு சிவாச்சாரியரை நியமித்து தினமும் காலையும் மாலையும் பூசைகள் நடைபெறச் செய்தார். மக்களும் வைரவப் பெருமானின் மீது அதிக பக்தி கொண்டவர்களாகவும் பெருமானிற்கு அபஷேகங்கள், பொங்கல்கள் செய்து திருவருளைப் பெற்று வாழ்ந்தனர். திரு.சுப்பிரமணியம் அவர்களும் பெருமான் மீது கொண்ட பெரும் பக்தியினால் ஆலயம் அமைந்த காணியின் முழுப் பரப்பளவையும் ஆலயத்திற்கென உபயம் செய்து எழுதி வழங்கினார். பக்தர்களும் தங்கள் நேரத்திக் கடன்களையெல்லாம் நிறைவேற்றி நல்லருள்

பெற்று வந்தனர். பெருமானின் அருள்பிரவாகத்தை பெற்ற பக்தர்கள் ஆலயத்தையும் சிறிது சிறிதாக அபிவிருத்தி செய்து வந்தனர். இவ்வாலயத்திற்கு முதல் முறையாக 1934ம் ஆண்டு கும்பாவிஷேகம் நடைபெற்று ஆலயம் ஆகம விதிப்படியான ஆலயமாக மாற்றியமைக்கப்பட்டது. பின்னர் சில அபிவிருத்தி வேலைகளும் திருத்தங்களும் செய்யப்பட்டு 1954ம் ஆண்டு மகா கும்பாவிஷேகம் செய்யப்பட்டது.

ஆலயத்தை சிறப்பாக வழிநடாத்தி வந்த திரு.ஆ.சுப்பிரமணியம் இயற்கையெய்தியைத் தொடர்ந்து ஆலயத்தைப் பராமரிப்பதெற்கென பொதுமக்களால் ஒரு தர்மகர்த்தா சபை உருவாக்கப்பட்டது. அச்சபைக்கு திரு.சு.நவரட்ணம் அவர்களை தலைவராகத் தெரிவு செய்தனர். இவரது தலைமையின் கீழ் ஆலய அபிவிருத்தி வேலைகள் மும்மரமாக எடுக்கப்பட்டு வந்தன.

வெள்ளிக்கிழமை தோறும் மாலைப்பூசை முடிவடைந்ததும் சிவநாம பஜனை செய்வதை ஊக்குவித்து வந்தார். இப்பஜனையில் பிள்ளைகள் கலந்து கொண்டு பண்ணிசையில் சிறப்புப் பெற வேண்டுமென்பதற்காக அவர்கள் பங்குபற்றுகின்ற தினங்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்து தனது சொந்த நிதியிலிருந்து சிறந்த பரிசில்களை வழங்கி ஊக்குவித்து வந்தார்.

ஆலயத்தின் அபிவிருத்தி வேலைகளிற்கு வெளிவீதி இல்லாமையும், உள்வீதி மிக சிறியதாக இருந்ததும் பெரும் இடையூறாக இருந்தது. திரு.நவரட்ணம் அவர்களது பெருமுயற்சியால் கோவிலிற்கு பின்புறமிருந்த திரு.பொ.பூரணானந்தம் அவர்களிற்குச் சொந்தமான காணியில் ஒரு பகுதியை கோவிலிற்கு உபயமாகவும், இன்னுமொரு பகுதியை விலைக்கும் பெற்று கோவிலிற்கான வெளிவீதியை உருவாக்கினார்.


கோவிலின் பலிபீடம் இருந்த பகுதிக்கான முன் மண்டபம் ஒன்றை கட்டிவித்தார். பின்னர் அதனை மேலும் பெருப்பித்து பெரிய ஆலயமாக உருவாக்கினார். ஆலயத்தில் நடைபெற்று வந்த உற்சவங்களிற்கு உற்சவ மூர்த்தி இல்லாமை பெருங்குறையாக இருந்தது. திரு.நவரட்ணம் அவர்கள் தனது உபயமாக வைரவப் பெருமானின் உற்சவ மூர்த்தியை செய்து கும்பாவிஷேகம் செய்வித்தார். தொடர்ந்து ஆலயத்திற்குத் தேவையான வாகனங்களை அடியார்களின் உபயமாக பெற ஏற்பாடுகள் செய்தார். முதலாவது வாகனமாக ஆட்டநிலையில் நாய் வாகனம் திரு.சி.வல்லிபுரம் அவர்களின் உபயமாகப் பெறப்பட்டது.

புதிய உற்சவ மூர்த்தி ஸ்தாபித்தன் பின்னர் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று விசேட அபிஷேகம் செய்யப் பெற்று இரவு வைரவப் பெருமான் தெருவீதி உலா வருவது ஆரம்பமாகியது. வைரவப் பெருமானிற்கு புதிதுபுதிதாக அபிஷேகங்களும் உற்சவங்களும் நடைபெற்று வந்த நேரத்தில்

திரு.நவரட்ணம் அவர்கள் பெருமானிற்கு மகோற்சவம் செய்ய வேண்டுமென்ற சிந்தனையை கொண்டிருந்தார். தனது சிந்தனையை பொதுக் கூட்டம் கூட்டி தெரியப்படுத்தினார். பொதுமக்களும் வைரவப் பெருமானிற்கு கொடியேற்றம், ரதோற்சவம் என்பன செய்வது ஆகம முறைப்படி இல்லாமையால் அலங்கார உற்சவம் செய்வது நன்மை பயக்குமெனத் தெரியப்படுத்தி ஒவ்வொரு வருடமும் சித்திரைப் பூரத்தை இறுதி நாட்திருவிழாவாக கொண்டு பத்து நாட்கள் பகல் அபிஷேகமும் இரவத் திருவிழாவும், பத்தாம் நாள் சங்காபிஷேகமும் இரவு தெருவீதித் திருவிழாவும் செய்வதென ஏகமனதாகத் தீர்மானித்தனர். இத்தீரமானத்திற்கு அமைய 1972ம் ஆண்டு தொடக்கம் வருடந் தோறும் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது.

திரு. நவரட்ணம் அவர்கள் 1969ம் ஆண்டு தனது பொறுப்பிலிருந்து நீங்கிய பின்னர் திரு. மு.சீவரட்ணம் அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றார். இவரது காலத்தில் மேலும் திருப்பணி வேலைகள் நடைபெற்றன. பல வாகனங்கள் உபயமாகப் பெறப்பட்டன. ஆலய பூசைக்குத் தேவையான விளக்குகள் தீபங்கள் போன்றவை சேகரிக்கப்பட்டன.

அலங்கார உற்சவம் ஆரம்பமான பிறகு உற்சவம் செய்வதற்கு வசந்த மண்டபம் இல்லாமையால் பல பிரச்சனைகளிற்கு மத்தியில் திருவிழா நடைபெற்றன. இதனால் வசந்த மண்டபம் ஒன்று கட்டுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு மண்டபம் நிர்மாணிக்கப்பட்டது.



அத்துடன் வாகனசாலையும் மடப்பள்ளியும் கட்டப்பட்டன. திரு சீவரட்ணம் 1984ம் ஆண்டு இயற்கையெய்தும் வரை ஆலயப் பொறுப்பாளராயிருந்து ஆலயம் சிறக்க பல பணிகளை முன்னெடுத்தார்.

எமது ஆலயம் சிறு ஆலயமாக இருந்தமையால் ஆலய உள்வீதியில் சுற்றுக் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் ஆலய மகா மண்டபத்தில் விநாயகர், சுப்பிரமணியர் மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூசைகள் நடைபெற்று வந்தன. இதனால் விநாயகருக்கும் சுப்பிரமணியருக்கும் தனித்தனியான ஆலயங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு திருசி.இராசையா குடும்பதினரின் உபயமாக விநயகராலயமும், திரு.ச.சதாசிவம் குடும்பத்தினரின்

உபயமாக சுப்பிமணியர் ஆலயமும் முறையே உள்வீதி தென்மேற்கு மூலையிலும், வடமேற்கு மூலையிலும் நிர்மாணிக்கப்பட்டன.

1984ம் ஆண்டு புதிய பரிபாலன சபைத் தலைவராகத் திரு.த.தர்மலிங்கம் பொறுப்பேற்றார். இவரும் ஆலய அபிவிருத்திப் பணிகளில் மும்மரமாக ஈடுபட்டு பல திருப்பணிகளை முன்னெடுத்தார். ஆலய உள்வீதிக்கான சுற்றுச் சுவர்கள் கட்டப்பட்டன. உள்வீதி கூரை இல்லாமலும், சீமெந்துத் தரையாக இல்லாமலிருந்ததால் மழை காலங்களில் சுவாமி வீதி வலம் வருவது பிரச்சனையாக இருந்தது. அவரது பெருமுயற்சியால் இத்திருப்பணி வேலைகள் சிறப்பாக நிறைவேறின.



கோயில் உள்வீதி முற்று முழுதாக கூரை போடப்பட்ட தரை சீமெந்து இடப்பட்ட பெரிய ஆலயமாக உருவாக்கப்பட்டது.

முழுமுதற் கடவுளாகிய விநாகப்பெருமானிற்கு எழுந்தருளி மூர்த்தி இல்லாமையால் அவரது விசேட உற்சவ காலங்களில் குறிப்பாக ஆவணிச் சதுர்த்தி, விநாயக சஷ்டி போன்ற விரத காலங்களில் அடியார்களிற்கு காட்சி கொடுப்பதற்கு உற்சவம் நடத்த முடியாமலிருந்தது. விநாயகப் பெருமானின் திருவருள் திரு.பொ.பரமநாதன் என்னும் அடியாரின் மனதில் எழுந்தருளி விநாயகமூர்த்தி செய்விக்க வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கியது. அவரும் எம்பெருமானை தனது குடும்ப உபயமாக எழுந்தருளச் செய்தார்.

ஆலய கோபுர வாசல் சாதாரண மதில் சுவராகவும், இரும்புக் கதவுடனும் இருந்தது. ஆலய பாதுகாப்பிறகு இவ்வமைப்பு போதாமையால் கோபுர அடித்தள வாசலாக அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. திரு.கந்தையா சண்முகலிங்கம் இத்திருப்பணியை நிறைவேற்ற முன் வந்து அதை நிறைவேற்றி முடித்தார்

மணிக்கூட்டுக் கோபுரம் மிகப் பழுதடைந்தமையால் அதனை மாற்றி புதிய மணிக்கூட்டுக் கோபுரம் அமைப்பதற்கு பெரு முயற்சி செய்து திருமதி இரத்தினம் சோமசுந்தரம் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் உபயமாக நிறைவேற்றி முடித்தார். கோயிலிற்கு முன் மண்டபம் இல்லாமையால் திருவிழாக் காலத்தில் தற்காலிகப் பந்தல் அமைத்து வருவதைக் கவனத்தில் கொண்டு



ஊர் மக்களின் பங்களிப்புடன் முன்மண்டபம் நிர்மாணித்து முடிக்கப்பட்டது.

இதே காலப் பகுதியில் எமது ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சுப்பிமணியக் கடவுளின் விசேட விரத காலங்களில் முருக பக்தர்களிற்கு காட்சி கொடுப்பதற்காக திரு.சி.சிவராசா குடும்பத்தினர் தங்கள் அதீத முருக பக்தியால் வள்ளி தெய்வயானை சமேதரான சுப்பிமணியர் எழுந்தருளி மூர்த்திகளை உபயம் செய்தனர்.

திரு.சு.நவரட்ணம் அவர்கள் தலைவராக இருந்த காலம் தொட்டு வைரவருக்குரிய அம்மன் சாமுண்டீஸ்வரிக்கு ஒரு ஆலயம் தெற்கு பக்கம் அமைக்க வேண்டுமென பெருவிருப்பத்தோடு இருந்தார். அவரது விருப்பத்தை அவரது பெறாமகன் திரு.பஞ்சரட்ணம் சண்முகதாஸன் நிறைவேற்ற முன்வந்து அம்மனிற்குரிய ஆலயத்தையும், மூல மூர்த்தியையும், எழுந்தருளி மூர்த்தியையும் செய்து உபயம் செய்து 2003ம் ஆண்டு கும்பாவிஷேகம் செய்வித்தார். இவ்வாண்டிலிருந்து வைரவப் பெருமான் சாமுண்டீஸ்வரி சமேதராய் உற்சவங்களின் போது காட்சியளித்து வருகிறார்.

அலங்கார உற்சவ காலத்தில் சுவாமி தெரு வீதி வரும் போது திருமஞ்சத்தில் எழுந்தருளி வரவேண்டுமென விரும்பி ஒரு திருமஞ்சம் செய்ய ஏற்பாடுகளைச் செய்தார். ஊர் மக்களின் பங்களிப்புடன் திருமஞ்சத்தையும், தரிப்பிடத்தையும் நிர்மாணித்தார்.



2009ம் ஆண்டு தெருவீதி திருவிழாவன்று தொடக்கம் திருமஞ்சத் திருவிழா நடைபெறுகிறது.

வருடாந்த உற்சவ காலங்களில் நடைபெறும் அன்னதானம் கோயில் உள் வீதியில் நடைபெற்று வந்தது. இதனால் இரவுத் திருவிழா நடாத்துவது மிகவும் கஷ்டமாக இருந்தது. இதனால் ஒரு அன்னதான மண்டபம் கட்ட வேண்டுமென நிர்வாக சபையில் தெரிவித்து பல முயற்சிகள் எடுத்தார். திரு.தி.வசந்தகுமார் இத்திருப்பணி வேலைகளை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டினார்.

2011ம்ஆணடு மார்ச் 06ம் திகதி பரிபாலன சபையில் நீண்ட காலமாக ஏறத்தாழ 40 வருடங்கள் செயலாளராக இருந்த திரு.வே.க.சண்முகலிங்கம் இயற்கையெய்த சபைச் செயற்பாடுகள் தொய்வடைந்தன. எனினும் தலைவர் திரு தர்மலிங்கத்தின் முயற்சியால் சபை மீளவும் ஆர்வத்துடன் செயற்படத் தொடங்கியது. .

திரு.தர்மலிங்கம் அவர்கள் அன்னதான மண்டபம் கட்டும் திருப்பணியை முன்னோக்கி நகர்த்தி வந்தார். திரு வசந்தகுமாரின் கட்டுமாணப் பணிகள் பொருத்தமாக அமையாததால் நிர்வாகத்தின் மேற்பார்வையில் இத்திருப்பணி வேலைகள் நடாத்த வேண்டுமென எடுத்த தீர்மானத்திற்கமைவாக இத்திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இம்முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் பரிபாலன சபைத் தலைவர் திடீரென 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் 02ம் திகதி இயற்கையெய்தினார். அடுத்தடுத்து பரிபாலன சபையின் முக்கிய பொறுப்பானவர்கள் இயற்கை யடைந்தது பரிபாலன சபையின் செயற்பாடுகளை மந்தகதிக்குத் தள்ளியது.

எனினும் பரிபாலன சபையினர் கூடி சபையின் உபதலைவராக இருந்த திரு.க.கனகசபாபதி அவர்களைத் தலைவராக தெரிவு செய்து பணிகளை தொய்வின்றி முன்னெடுக்கத் தொடங்கினர். ஆரம்பிக்கப்பட்ட அன்னதான மண்டப நிர்மாணப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று அன்னதானம் நடாத்தக் கூடியதாக ஓரளவு நிறைவு செய்யப்பட்டது. 2012ம் ஆண்டு உற்சவ காலத்தில் அன்னதானம் இம்மண்டபத்திலேயே நடைபெற்றது.



தொடர்ந்து நிதி சேகரிக்கப்பட்டு மண்டப வேலைகள் சிறிது சிறிதாக அபிவிருத்தி செய்யப்பட்டது. எனினும் இன்னும் மண்டபத்திற்கான மின்னிணைப்பு, முன் மண்டபம் அமைத்தல், நீர் விநியோகத் தொட்டி

அமைத்தல், மலசல கூடம் அமைத்தல் போன்ற வேலைகள் செய்ய வேண்டியுள்ளது.

வருடாந்த அலங்கார உற்சவத்தில் வைரவப் பெருமான் வானுயர்ந்த சப்பை ரதத்தில் பவனி வந்து அருளபாலிக்க வேண்டுமென பல அடியாரகள் மனதில் எண்ணம் உதித்திருந்தது. அடியார்களின் விருப்பத்தை நிறைவேற்ற 2013ம் ஆண்டு உற்சவத்தின் போது 9ம் திருவிழா உபயகாரராகிய அமரர் கா.கந்தையா குடும்பத்தினர் சப்பை ரதம் புதிதாக நிர்மாணித்து உபயம் செய்தனர்.



அவ்வருடத்திலிருந்து சுவாமி சப்பரத்தில் வீதி வலம் வருகிறார்.

2014ம் ஆண்டு உற்சவத்தின் போது 8ம் திருவிழா உபயகாரராகிய அமரர் இராமர் கந்தையா குடும்பம் சார்பில் கு. பிரதீபன் குடும்பத்தினர் இரட்டைக் குதிரை வாகனம் உபயம் செய்தனர்.



இவ்வாண்டிலிருந்து 8ம் திருவிழா இரட்டைக் குதிரை வாகனத் திருவிழாவாக மாற்றமடைந்தது.

ஆலயத்திற்கு திரு.க.கனகசபாபதி தலைமையில் பல புதிய திருப்பணி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. இவ்வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு பெருந்தொகை நிதி தேவைப்படுகின்றது. வைரவ அடியார்கள் பங்களிப்புச் செய்வதன் மூலம் அவற்றை நிறைவேற்றலாமென நம்புகின்றோம்.

**<u>உத்தேசிக்கப்பட்டுள்ள திருப்பணி வேலைகள் சில:</u>**

1. ஆலயத்திற்கென மூன்றடுக்குக் கோபுரம் நிர்மாணித்தல்.
2. ஆலயத்திற்கான திருத்தவேலைகள் செய்யப்பட்டு கும்பாவிஷேகம் செய்தல்.
3. ஆலய கிணற்றிலிருந்து ஊர் மக்களிற்கு குடி தண்ணீர் விநியோகம் செய்வதற்கான நீர்த் தொட்டி நிர்மாணித்து ஏனைய உபகரணங்கள் பொருத்துதல்.
4. இளைய சமுதாயத்தினருக்கு சமய அறிவை பெருக்குவதற்கு நடைபெறும் அறநெறிப் பாடசாலைக்கான கட்டிடம் அமைத்தல்.

ஆலய தரிசனத்தில் தூல லிங்கமாகிய கோபுர தரிசனம் சிறந்த தரிசனமாகும். எமது ஆலயத்தில் திருக்கோபுரம் அமையாதிருப்பது ஒரு பெரும் குறைபாடாகும். வைரவ அடியார்களிற்கு தூல லிங்கதரிசனம் கிடைக்காமை அவர்களது பக்தி மூலவர் மீது ஏற்படுவதற்கு தடங்கலாக இருக்கின்றது.

பல அடியார்களின் மனதில் வைரவப் பெருமானிற்கு திருக்கோபுரம் அமைக்க வேண்டுமென்ற சிந்தனை ஏற்பட்டுள்ளது. ஆலய பரிபாலன சபையினரும் திருக்கோபுரம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆரம்ப கட்டமாக மாதிரி வரை படம், ஏற்படக் கூடிய செலவீன மதிப்பீடு என்பவற்றை தென்னிந்திய பிரபல சிற்பாசிரியர் புருஷோத்தமனிடம் கோரிய போது அவர் முழு வேலையையும் நிறைவேற்ற ரூபா எண்பத்தியொரு இலட்சம் (8,100,000.00) தேவை என மதிப்பீடு செய்துள்ளார்.

இப்பெருந்தொகை நிதி உள்ளூரில் சேகரிக்க முடியாது என்பதை கருத்தில் கொண்டு உலகம் முழுதும் வாழும் அடியார்களிடம் திருப்பணி நிதி கோர தீர்மானித்துள்ளனர். அன்பான அடியார்களே நீங்கள் அனைவரும் சிந்தித்து இத்திருப்பணி நிறைவேறத் தங்கள் பங்களிப்புக்களை நல்குமாறு அன்புடன் கோருகின்றோம்.

அனைவருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ ஞானவைரவப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.